புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஐங்குறுநூற்றில் ஆடை அலங்காரப் பழக்க வழக்கங்கள்

முனைவர் வ. பாக்கியராஜ்,
உதவிப்பேராசிரியர்,
சி.கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி,
அண்ணாநகர், சென்னை – 600 102.

ஆய்வுச் சுருக்கம்

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை அமைப்பு முறையின் வெளிப்பாடே பண்பாடாகிறது. வாழ்க்கை அமைப்பு என்பது அச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், கலைகள், இலக்கியங்கள் முதலியவற்றால் அறியப்படுவது. சுருங்கக்கூறின், பண்பாடென்பது ஒரு தலைமுறையினர், சென்ற தலைமுறையினரிடம் பெற்றுக்கொண்ட வாழ்க்கை முறையாகும். ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்குப் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் அடிப்படைக் கருவிகளாக அமைகின்றன.

பழக்கம் என்பது கற்கும் செயலாகும். தனிமனிதனின் செயல்கள் தொடர்ந்து அவனால் செய்யப்பட்டு வரும்போது நாளடைவில் இது பழக்கமாகிறது. பழக்கமானதும் ஒரு செயலின் வெளிப்பாடு முன்பு இருந்ததைவிட முறையாகப் பண்பட்டு வெளிவருவதைக் காணலாம். தனி மனிதன் ஒருவன் பழகிப்போன முறையில் திரும்பத் திரும்பச் செய்துவரும் ஒரு குறிப்பிட்ட செயலைப் பல மனிதர் ஒன்றாகச் சேர்ந்து செய்கின்றபொழுது, அது வழக்கம் எனப் போற்றப்படுகிறது. வழக்கம் என்பது சமுதாயத்திற்குரியதாக அமைந்து விடுகிறது.

மக்களின் அடிப்படைத் தேவைகளுள் உணவிற்கு அடுத்த நிலையினைப் பெறுவது உடையாகும். தழை, மரப்பட்டை போன்றவற்றை உடுத்திய ஆதிமனிதன் தன் தேடலால் விலங்குகளின் தோலினையும் உடுத்தலானான். பின்னர் நாகரிக வளர்ச்சியால் உந்தப்பட்டவன் நூலாடைகளை உற்பத்தி செய்யும் நிலைக்கு உயர்ந்தான்.

ஆடை மனிதனின் அடிப்படைத் தேவையாகவும், பண்பாட்டுச் சின்னமாகவும் விளங்குகிறது. இலக்கியங்களில் ஆடைகள் பற்றி பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. உடுக்கை, துணி ஆடை, உடுப்பு, குப்பாயம், மெய்ப்பை, பட்டுடை, கலிங்கம், புடவை, கச்சு, தானை, படாம், தழையாடை, ஞாழல் ஆடை, நெய்தல் பகைத்தழை என்பன சங்க காலத்தில் ஆடையைக் குறிக்கும் சொற்களாகும்.

சங்க கால மக்கள் பல்வேறு வகையான அணிகலன்களைப் பயன்படுத்தியவர்கள். காலில் பொன்னாலான சதங்கை, இடுப்பிலே பொன்மணியிலான வடம், அதன்மேல் சிவந்த பவழ வடங்கள் அவற்றின் மேல் பூந்துகில் கையில் அழகில் தொடி, வாள், வளையல், தொடி, மழுப் போன்ற அணிகளை நெருங்கக்கட்டி அதன் இரண்டு புறத்திலும் காளை உருவம் தாங்கிய பவழத்தால் செய்த அணி, முத்தும் பல மணிகளும் பிறவும் கோத்த மூன்று வடங்கள் அவற்றுக்கு மேல் நீலப்பூப் போலச் செய்த மணிமாலை ஆகியவற்றைச் சிறுவர்க்கு அணிவித்து அழகு செய்தவர்கள் பழந்தமிழர்கள். அவ்வகையில் எட்டுத்தொகையில் ஒன்றான ஐங்குறுநூற்றின் வழி இவைகளை வெளிக்கொணரப்படுகிறது.

முன்னுரை

பழந்தமிழ் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் உடையின் தேவையை நிறைவு செய்ய இரண்டு வகையான வழிமுறைகளைச் செயல்படுத்தி வந்துள்ளமை புலனாகிறது. ஒன்று

வறியவர்களுக்கு உணவோடு உடையையும் கிடைக்கச் செய்தல், மற்றொன்று உடையின் உற்பத்திக்கு அடிப்படையான தொழிலினைப் பெருக்குதல் என்பதாகும்.

தன்னை நாடி வரும் வறியவர்க்கும், பாணர்க்கும் அவர்களின் கிழிசல் ஆடைகளைக் களைந்து, புத்தாடைகளை உடுக்கச்செய்யும் பழந்தமிழ் அரசர்களின் செயல்களைப் புறநானூறு காட்டுகின்றது. அவ்வாறு வழங்கப்பட்ட ஆடைகள் பலவகை நுண்வேலைப்பாடுகளைக் கொண்டதாகவும், பல்வகைத் தொழில்நுட்பங்களின் வெளிப்பாடாகவும் விளங்கின.

பாம்பின் தோல் போன்ற வடிவையுடையனவும், மூங்கிலின் உள்பக்கத்தில் உள்ள தோலைப் போன்றனவும், நெய்யப்பட்ட நூல் இழைகளின் வரிசை அறிய முடியாத, பூ வேலைப்பாட்டுடன் கூடியதும் ஆகிய ஆடைகளை வறியவர்க்குக் கொடுத்து உடுக்கச் செய்தவன் தமிழன். இதைப்போல, மணி, பொன், முத்துக்களோடு பல்வேறு வகையான உடைகளை வழங்கியவன்.

மேலும், ஆடைகளுக்கு வண்ணம் ஏற்றும் முறையினைப் பழந்தமிழர் கற்றிருந்தனர் என்பதோடு, கடல் அலை போன்ற ஆடைகளை உற்பத்தி செய்யும் கை வன்மை கொண்டிருந்தனர். நெசவுத் தொழிலுக்கு அடிப்படையான பருத்தியை உள்நாட்டிலேயே விளைவித்ததோடு இல்லாமல் பெண்களும் இத்தொழிலினை வீட்டிலிருந்தே செய்தனர் என்ற பல அறியத் தகவல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இவ்வகைச் செயல்பாடுகள் ஆடையின் தேவையை நிறைவு செய்ய பழந்தமிழர் மேற்கொண்ட திட்டங்களை ஐங்குறுநூற்றில் ஆடை அலங்காரப் பழக்கவழக்கங்கள் என்னும் பொருண்மையின் வழி ஞாழல் ஆடை, தழை ஆடை அலங்காரப் பொருட்கள் வளையல், சங்கு வளையல், இழை, ஒண் தொடி, தொடி அணிதல், காஞ்சி, மணிப்பூண், மேகலை, பாண்டில், தோள் அணிதல், செவ்வையான அணி ஆகியவைகளை இக்கால மக்களுக்கு எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஞாழல் ஆடை

தலைவன் தனது காதலியின் இயல்பைத் தோழினிடம் கூறுகிறான். அவள் சங்கு வளையல்களையும், ஞாழல் தழையால் ஆன ஆடைகளையும் அணிந்ததை,

"கடற்கோடு செறிந்த் வளைவார் முன்கைக்
கழிப்பூத் தொடர்ந்த இரும்பல் கூந்தல்
கானல் ஞாழல் கவின்பெறு தழையள்
வரையர மகளிரின் அரியளென்
நிறையரு நெஞ்சம் கொண்டொளித் தோளே" (ஐங். 195)

தழை ஆடை

தழை ஆடை உடுத்தும் பழக்கம் மக்களிடையே இருந்ததை ஐங்குறுநூறு கூறுகிறது. பகைத் தழை மலர்களாலும் குழையாலும் தொடுக்கப்பட்ட தழையுடை நீல நிறம் உடைய நெய்தலே தொடுப்பின் அழகு. பிறவாமை கருதி செருந்தி, புன்னை, அரும்பு முதலியவை கலந்து கொடுக்கப்பட்டதால் பகைத் தழை எனக் கொள்ளப்பட்டது.

பொன்மை வெண்மை பசுமை நிறம் கொண்ட பல மலர்களும் கலந்து கிடந்தாலும் இடையில் இடையே மணிபோல் காணப்படும். பெறுவதற்கு அரிய முத்தைப் பரதவர் விற்கும் தொழில் குடியில் பிறந்தவள் தலைவி ஆவாள் இதனை,

"வளைபடு முத்தம் பரதவர் பகரும்
கடல்கெழு கொண்கன் காதல் மடமகள்
கெடலரும் துயரம் நல்கிப்
படலின் பாயல் வவ்வி நல்கியோளே" (ஐங்.374)

எனப் பாடல் கூறுகிறது.

சங்கில் பிறக்கும் முத்துக்களைக் கொணர்ந்து பரதவர் ஏனைய நிலத்தில் வாழ்பவர்க்கு விற்கும் கடல் பொருந்திய கொண்கனின் அன்பு மகள் நீக்க முடியாத துயரத்தைத் தந்து, கண் மூடுதலான இனிய உறக்கத்தைக் கவர்ந்து கொண்டாள் என்று தலைவன் கூறுவதை அறிய முடிகிறது.

*வளையல்*

*"இறையேர் எல்வளை நெகிழ்பு ஓடும்" (ஐங்.20)*

*தாமரையில் உள்ள முட்டையை வேழத்தின் பூ துடைக்கும் என்ற இது தலைவி பால் உள்ள தலைமகனைப் பரத்தையர் விலக்குவர் என்பது கருத்து. இதில் வரும் எல்வளை ஒளியுடைய வளையல் ஆகும். இது தலைவனின் பிரிவால் கழன்று ஓடுகிறது.*

*இழை அணி*

*தலைவனின் மார்பு பல மகளிர் இழைகளை நெகிழச் செய்யும். பின்வரும் பாடலில் 'இழை' என்ற அணியிடம் பெறுகிறது.*

*"அயல்புறம் தந்த புனிற்றுவளர் பைங்காய்*
*வயலைச் செங்கொடி கள்வன் அறுக்கும்*
*கழனி ஊரன் மார்பு பலர்க்கு*
*இழை நெகிழ் செல்லல் ஆகும் அன்னாய்" (ஐங்.25)*

*தோழியே, "நம் அம்மே! இல்லத்துக்கு அண்மையில் நட்டு வளர்த்த முற்றாத பசுமையான காய்களையுடைய வயலையின் சிறந்த கொடியை, நண்டு தன் கூரிய நகத்தால் அறுக்கும் வயலையுடைய ஊரன் தலைவன். அத்தகையவனின் மார்பு ஒருவருக்கே அல்லாது மகளிர் பலர்க்கு அணிகளை நெகிழச் செய்கின்ற துன்பத்தைத் தருவதாகும்" என்று தலைவியைப் பார்த்து கூறினாள். இழை அணிகள் கழன்று விடுவதற்குக் காரணமானத் துன்பத்தைச் செய்வதாகும். தலைவன் மார்பு மகளிர் அணிகளை நெகிழச் செய்யும் என இயையும் துன்பம். வயலையின் செங்கொடியின் பசிய காய் வருந்த அதன் கொடியை நண்டு அறுக்கும் என்பது மகனைப் பெற்று மனையில் இருக்கும் நம் நலத்தை மகன் வருந்தச் செய்கின்றான் என்ற பொருளை விளக்கியது.*

*வீட்டின் அயலில் வளர்ந்த வயலைக் கொடியை அலவன் அறுக்கும் என்றதால் புறத்தே பரத்தையரைக் கூடிப் பின் அவரும் வருந்த அவரது தொடர்பை அறுத்து ஒழுகுகின்றான் எனவும் உரைப்பார்.*

*ஒண் தொடி*

*மணந்து கொண்ட அண்மைக் காலத்திலேயே தலைவனுக்குப் பரத்தமை ஒழுக்கம் உண்டாகிய போது அதை அறிந்த தலைவி அவனுடன் புலவி கொண்டு சொல்வதாக அமைந்த பாடலில் ஒண்தொடி எனும் வளையல் இடம்பெறுவதை,*

*"மணந்தனை யருளாய் ஆயினும் பைபயத்*
*தணந்தனை யாகி, உய்ம்மோ – நும்மூர்*
*ஒண்தொடி முன்கை ஆயமும்*
*தண்டுறை ஊரண் பண்டெனப் படற்கே" (ஐங்.83)*

*தலைவி தலைவனை நோக்கி, 'மகிழ்ந்து, என்னை மணந்து கொண்ட நீ எனக்கு உன் அருளை நீண்ட நாள் கொடுக்காமல் போனாலும் என்னுடைய ஊரில் உள்ள தொடி அணிந்த முன் கையையுடைய பரத்தையர் பலரும் தன்துறையூரனாகிய உனக்கு தலைவி எனக் கூறப்படும் சிறப்புப் பெறுமாறு மெல்ல மெல்ல நீங்கி ஒழுகுவாய்' என்று கூறினாள்.*

*தொண்டி நகரில் குளிர்ந்த புதிய மலரின் மணம் வீசும் தொடியையும், அழகியதாய் அகன்ற அல்குலையும், கொய்யப்பட்ட தளிர்போன்ற மேனியையும் உடையவளே! என் பண்பையும் உறக்கத்தையும் உன் தோழி கவர்ந்து கொண்டு என்னிடம் அவை இல்லாதவை ஆக்கினாள். ஆதலால் அவ்வாறு கொள்வதற்கு யான் செய்த தவறுதான் யாது? என்று தலைவன் தோழியை நோக்கி வினவினான்.*

*தொடி அணிதல்*

*"ஒண்தொடி அரிவை கொண்டனள், நெஞ்சே!*
*வண்டிமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்*
*உரவுக் கடலொலித் திரையென*
*இரவினானும் துயிலறியேனே" (ஐங்.172)*

*ஒளி பொருந்திய தொடியை அணிந்த அரிவையானவள் என் நெஞ்சைக் கவர்ந்து கொண்டாள் ஆகலின், வண்டுகள் ஒலிக்கும் குளிர்ந்த துறையையுடை தொண்டி நகரத்துப் பரந்த கடலில்*

*எழுந்து முழங்கும் அலைகளைப்போல் இரவிலும் உறக்கம் கொள்ளேன் ஆனேன்'' எனப் பாங்கன் வினவத் தலைவன் கூறினான்.*

*சங்கு வளையல்*

*வளையல், தொடி ஆகிய இரு வகையான அணிகள் குறித்த செய்தி பாடலில்,*

*''கோடிர் எல்வளைக் கொழும்பல் கூந்தல்*
*ஆய்தொடி, மடவரல் வேண்டுதி ஆயின்*
*தெண்கழி சேயிறாப் படூஉம்*
*தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ" (ஐங்.196)*

*என இடம் பெறுகிறது.*

*தோழி தலைவனை நோக்கி, "சங்கை அறுத்துச் செய்த வளையையும், கொழுவிய கூந்தலையும், நுண்மையான தொடியையும் உடைய இவளைக் கூடுதல் வேண்டினவாயின், தெளிந்த நீரையுடைய உப்பங்கழியில் வேண்டுவார் கொள்ளுமாறு, செவ்விய இரால் மீன்கள் அகப்படும் குளிர்ந்த கடல் நிலத்தலைவனே! வேறுவகை இல்லாமையால் மணந்து கொள்வாயாக!" என்று சொன்னாள்.*

*வளை சங்கினால் செய்யப்படுவது. தொடி சங்காலும் யானைக் கொம்பினாலும் செய்யப்படுவது. வளை வேறு தொடி வேறு என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.*

*நகை - அணி*

*அக்காலப்பெண்டி மணிகள் பதித்த நகையினை அணிந்தனர் அதனை,*

*''அழலவிர் மணிப் பூண் அனையப்*
*பெயலாலானா என் கண்ணே தெய்யோ." (ஐங்.232)*

*எனும் பாடல் கூறுகிறது. இதில் வரும் 'மணிப்பூண்' அனைய எனும் சொற்றொடரில் இதனைக் காண முடிகிறது.*

*மேகலை அணிதல்*

*தலைவியைப் பிரிந்து செல்ல இருக்கும் தலைவனுக்குத் தோழி தலைமகளின் பிரிவாற்றாமையைக் கூறிய பாடலில் அணி பற்றிய செய்தி இடம்பெறுகிறது.*

*''வெல்போர்க் குரிசில் நீ வியன்கரன் இறப்பின்*
*பல்காழ் அல்குல் அல்வரி நாடக்*
*குழலினும் இனைகுவள் பெரிதே*
*விழவொலி கூந்தல் மா அயோளே'' (ஐங்.306)*

*தோழியே 'வெல்லும் போரை உடைய தலைவனான நீ அகன்ற பாலையைக் கடந்து சென்றதால் பல மணிகள் பொருந்திய மேகலை அணிந்த அல்குலிடத்து அழகிய வரிகள் வாட்டம் அடைய உனது பிரிவாற்றாமையால் மண விழாவைப் போல நல் மணம் கமழும் கூந்தலையும் மாமை நிறத்தையும் கொண்ட இவள் குழல் ஒலிப்பதைப்போன்று பெரிதும் அழுவாள்'' என்று கூறிச் செல்வதைத் தவிர்த்தாள்.*

*பாண்டில் அணிதல்*

*பிரிந்து செல்ல இருக்கும் தலைவனுக்குத் தோழி நீ எண்ணியதை முடித்தாய் ஆயினும் இவள் அழகு மீட்டற்கு அரியதாகிவிடும் எனக் கூறிச் செலவழுங்குவித்த பாடலில் பாண்டில் அணியும் வழக்கத்தை,*

*''போலம்பசும் பாண்டில் காசுநிரை அல்குல்*
*இலங்குவளை மென்தோள், இழை நிலைநெகிழப்*
*பிரிதல் வல்லுவை யாயின்*
*அரிதே விடலை இவள் ஆய்நுதல் கவினே'' (ஐங்.310)*

*தோழி தலைவனை நோக்கி, தலைவனே, பொன்னாற் செய்யப்பட்ட பசுமையான பாண்டிலைச் சுற்றி மணிகள் கோத்து அணிந்த அல்குலையும் விளங்கும் வளையலையும் மென்மையான தோளையும் உடைய இவள் அந்த அணிகள் நின்ற நிலையினின்று கழன்று நீங்க, உனது பிரிவால் இவளிடத்து நீங்கிக் கெடும் சிறு நெற்றியின் அழகு பெறுவதற்கு அரிது'' என்று கூறினாள்.*

பாண்டில் என்பது பொன்னால் செய்யப்பட்ட ஒருவகை அணி, இதைச் சுற்றி மணிகள் கோத்து மேகலையுடன் அணிதல் வழக்கம். பொன்னால் ஆன பசுமையான வட்டக்காசுகள், பாண்டில் வட்டம் எனவும் உரைப்பர்.

தலைவியின் மெலிவிற்கு வருந்திய தலைமகன் பிரிந்து சென்றபோது தோழி கூறிய மற்றொரு பாடலிலும் பாண்டில் அணிகுறித்த செய்தி இடம் பெறுகிறது.

"பொன்செய் பாண்டில் பொலங்கலம் நந்தத்
தேரகல் அல்குல் அவ்வரி வாட
இறந்தோர் மன்றதாமே பிறங்குமலைப்
புல்லலையர் ஓமை நீடிய
புலிவழங்கு அதர கானத்தானே?" (ஐங்.316)

தோழி, உயர்ந்த மலைப்பக்கத்தில் புல்லென்ற அடிப் பகுதியை உடைய ஓமை மரங்கள் நிறைந்த புலிகள் திரியும் காடு. அதில் பொன்னால் செய்யப்பட்ட பாண்டில் என்ற பொன்னணி நெகிழ, தேரின் தட்டைப் போன்ற அகன்ற அல்குலில் கிடந்த அழகிய வரிகள் வாட, நம்மைப் பிரிந்து சென்றார். அந்தப் பிரிவை ஆற்ற முடியுமா? என்று உரைத்தாள்.

### தோள் அணிதல்

தலைவன் நம்மைப் பிரியான் என எண்ணியிருந்தாள் தலைவி. ஆனால் அவன் பிரிந்தான். அப்போது அவள் இரங்கிப் பாடுவதாக அமையும் பாடலில் தோளணி இடம்பெற்றுள்ளதை,

"ஆய்நலம் பசப்ப அரும் படர் நலிய
வேய்மருள் பணைத்தோள் வில்லிழை நெகிழ
நசைநனி கொன்றோர் மன்ற – இசை நிமிர்ந்து
ஓடெரிநடந்த வைப்பின்
கோடுயர் பிறங்கல் மலையிறந்தோரே" (ஐங்.318)

தலைவி, 'ஓசை மிக்குப் பலவிடத்தும் பரவிப் போகும் தீ எரிந்த இடத்தை உடைய முடிகளால் உயர்ந்து செறிந்த மலையைக் கடந்து சென்று தலைவர், அழகிய என் நலம் கெட்டுப்பசலை பாயவும் அவர்மேல் உள்ள நினைவு வருத்துகிறது. ஆதலால் மூங்கில் போல் பருத்த தோளிடத்து அணிந்த ஒளி வீசும் மணிகள் கழன்று நீங்கவும் பிரிந்து, தன் உள்ளத்தில் எழும் விருப்பத்தைப் பெரிதும் அழித்துவிட்டார்' என்று கூறியன்மூலம் தலைவியின் மனநிலையை அறிய முடிகிறது.

### செவ்வையான அணி

மகளிர் செவ்வையான அணியினை அணிந்த செய்தி இடம்பெற்றுள்ளதை,

"யாங்கு வல்லுநையோ – ஓங்கல் வெற்ப
இரும்பல் கூந்தல் திருந்திழை அரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ" (ஐங்.231)

இதில் வரும் திருந்திழை என்பதற்கு செவ்வையான அணி என்று பொருளாகும்.

### முடிவுரை

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான ஐங்குறுநூற்றில் வளையல், சங்கு வளையல், இழை, ஒண் தொடி, தொடி, காஞ்சி, மணிப்பூண், மேகலை, பாண்டில், தோள் அணி, செவ்வையான அணி, சிலம்பு, கழல் எனப் பல வகையான அணிகள் மகளிர் அணிந்தது தெரிகிறது.

பொன்மை வெண்மை பசுமை நிறம் கொண்ட பல மலர்களும் கலந்து கிடந்தாலும் இடையில் இடையே மணிபோல் காணப்படும். பெறுவதற்கு அரிய முத்தைப் பரதவர் விற்கும் தொழில் குடியில் பிறந்தவள் தலைவி என்பதை அறிய முடிகிறது.

தலைவன் தலைவியை பொருளீட்டுவதன் காரணமாகவும், பரத்தையின் காரணமாகவும் பிரிகின்றான். அவ்வாறு பிரியின் தலைவியின் நெற்றி சுருக்கமும், பருத்த தோள்கள் நெகிழ்ந்தும் அணிந்த அணிகலன்கள் பலவும் நெகிழ்வதற்கு இதுவே காரணம் என்பதை தெளிவாகிறது. மேலும் தலைவன் தொண்டி நரத்தைச் சார்ந்தவன் என்றதனால் தொண்டி நகரம் பற்றிய செய்திகளையும் அறிய முடிகிறது.

*பார்வை நூல்கள்*


1. *சங்க இலக்கியம் ஐங்குறுநூறு (தொகுதி 1&2), முனைவர் அ. தட்சிணாமூர்த்தி., நீயூ செஞ்சுரி புக்ஹவுஸ், அம்பத்தூர், சென்னை – 600 098. 2004.*
2. *ஐங்குறுநூறு, ஔவை சு.துரைசாமிப்பிள்ளை., அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1978.*
3. *சங்க இலக்கியம் ஐங்குறுநூறு, முனைவர் அர. சிங்காரவடிவேலன்., கோவிலூர் மடாலயம்.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********